# LAABH SAMACHAR


Volume: 10 | Issue : 07 | OCTOBER 2021 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE















SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

# மெட்ரோ ஷூ மார்ட்




16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

# Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems


Borewell Submersibles


Single Phase Jet Pumps


Pressure Boosting Systems


Electric Motors


Single Phase Domestic Pumps


Agricultural Monoblocks


Open-well Submersibles

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014



# Thirumalay Tradings

presents

V Carry Bags

MINIMUM ORDER 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India

* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அல்கிதெ ச்சோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் சார்பாக **இனிய தீபாவளி நல்வாழ்த்து**களை தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் கொண்டாடும் இந்த மகிழ்ச்சியான தருணம் தொடர்ந்து நீடித்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

நெசவாளர்களை மேம்படுத்தும் வகையில், மேலும் 10 நகரங்களில் கைத்தறி வடிவமைப்பு ஆதார மையங்கள் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட உள்ளன. உள்ளூர் பொருட்களுக்கு மக்கள் குரல் கொடுக்கத் தொடங்கியதன் மூலம், கடந்த 7 ஆண்டுகளில் கைத்தறி துறை பெருமளவில் புத்துயிர் பெற்றுள்ளது. வடிவமைப்பு நிறுவனங்களை நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுடன் இணைக்கும் வகையில், மேலும் 10 வடிவமைப்பு ஆதார மையங்களை மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் ஏற்படுத்த உள்ளது. தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் உதவியுடன் இந்த மையங்கள் அமைக்கப்பட உள்ளன. சென்னையிலும் இந்த மையம் அமைய இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு வணிகர்களின் நலனுக்காக துவக்கப்பட்ட **தமிழ்நாடு வணிக நல வாரியம்**, தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட அருமையான ஒரு திட்டம் ஆகும். கடந்த மாதம் சேம்பர்-ன் வேண்டுகோளுக்கு இணங்க, இந்த வாரியத்தில் இணைந்த அங்கத்தினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு**
**இனத்துள தாகும் அறிவு.**

**பொருள்:** ஒருவன் தான் செய்வதெல்லாம் தன்னுடைய சொந்த அறிவினால் செய்வதாகவே எண்ணும்படி செய்து, அவனையும் ஏமாற்றிவிட்டுக் கடைசியில் அவ்வறிவு அவனுடைய சேர்க்கையின் அறிவினால் செய்வதாகவே அமைந்துவிடும்.

**அதிகாரம் 46** **சிற்றினம் சேராமை** **அரசியல்**

(அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை)


**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence,
Business News / Information,
Govt. Notifictions, Amendments,
New Technology etc.,
**93441 97952**

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

இல்லத்தில் மங்கலம் பொங்க, தொழில் அபிவிருத்தி அடைய, தீப ஒளியான தீபாவளியை ஆனந்தமாக கொண்டாடி மகிழ சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் **இனிய தீபாவளி நல்வாழ்த்து**களை தெரிவித்துக்கொள்கிறேன்.

05.10.2021 – **அந்தாமானில் தொழில் வாய்ப்புகள்** என்ற தலைப்பிலான நிகழ்ச்சி, ஜூம் செயலி வழியாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக அந்தமானில் உள்ள **Er. T.N. கிருஷ்ணமூர்த்தி,** Chief Engineer & Administration Andaman Lakshadweep Harbour Works, Ministry of Shipping அவர்கள் கலந்து கொண்டு தொழில் வாய்ப்புகள் குறித்து விரிவாக பேசினார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஒருங்கிணைத்தார். செயற்குழு உறுப்பினர் திரு. V.V. **ராம்லக்ஷ்மண்** அவர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

10.10.2021 – மதுரைக்கு வருகை தந்த தெலுங்கானா மாநில மற்றும் புதுச்சேரி ஆளுநர் மேதகு திருமதி. **தமிழிசை சௌந்திரராஜன்** அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து, தொழில் மற்றும் மொழி மேம்பாட்டிற்கான கோரிக்கை மனுவையும் அளித்தனர்.

12.10.2021 – தமிழ்நாடு வணிக நல வாரியத்தில் உறுப்பினர்களாக, அங்கத்தினர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை நமது சேம்பர் நிர்வாகிகள், மதுரை வணிக வரி இணை ஆணையர் திரு. **குறிஞ்சி செல்வன்** அவர்களை நேரில் சந்தித்து அளித்தனர். உடன் சில கோரிக்கைகள் அடங்கிய மனுவும் அளிக்கப்பட்டது. இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்த சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. **L.B. அசோக் குமார்** அவர்களுக்கு நன்றி.

– K.K. தினேஷ்

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

ஒளியின்றி உலகில் உயிர்கள் இல்லை. சூரியனின் ஒளியும், சந்திரனின் ஒளியும் பூமிக்கு மிகக்குறைவாக கிடைக்கும் காலம் ஐப்பசி மாதம் அமாவாசை தினம். உலகுக்கே ஒளி குன்றிய அந்நாளை கணித்துத் தான் நம் முன்னோர்கள் ஒவ்வொருவரின் வீட்டில் விளக்கேற்றச் செய்தனர். கிருஷ்ண பரமாத்மா, நரகாசுரனை வதம் செய்த தினமாகவும் கருதப்படுகிறது. ஒவ்வொருவரும், குறிப்பாக அடுத்து வரும் சந்ததியினர்கள், நமது நாட்டின் எந்த ஒரு பண்டிகைகளையும் ஒரு விழாவாக மட்டுமே எண்ணி கொண்டாடாமல், பண்டிகைகளை கொண்டாடுவதன் பின்னால் சொல்லப்பட்ட அறிவியல் பூர்வமான தகவல்களையும் உணர்ந்து உணர்வுடன் கொண்டாட வேண்டும். தீயவைகள் ஒழிந்து நல்வழி பிறந்திட ஒன்றிணைந்து செயல்படுவோம். கலாச்சாரத்தை காப்போம் என்று கூறி சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது **இனிய தீபாவளி நல் வாழ்த்து**களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாதமும், புதுமையான படைப்பாளிகள் / சாதனையாளர்களை அறிந்து நமது லாப் ஸமாச்சாரில் வெளியிடப்படுகிறது. அந்த வகையில், இந்த மாதம், நமது சேம்பர் அங்கத்தினரின் புல்லாங்குழல் தயாரிப்பு பற்றிய நேர்காணலை இந்த மாதம் பிரசுரித்துள்ளோம். சேம்பர் அங்கத்தினர்கள் இதழின் அனைத்து பக்கங்களையும் படித்து தங்களின் கருத்துக்களை 93441 97952 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிற்கு பகிர வேண்டி கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் கூறும் கருத்தே, லாப் ஸமாச்சார் இதழுக்கு கிடைக்கும் ஊக்கம்.

நன்றி - B.S. ஜெனார்த்தனன்




**அனைவருக்கும்**

**இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்**


Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

முகக்கவசத்தை முறையாக அணியுங்கள்

[https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk](https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk)



https://www.facebook.com/100003191034909/videos/299324488293216/

# அந்தமானில்
## தொழில் வாய்ப்புகள்


Er. T.N. கிருஷ்ணமூர்த்தி B.E., MBA., F.IE.
Chief Engineer & Administration
Andaman Lakshadweep Harbour Works,
Ministry of Shipping

இளைய தொழில் முனைவோர்கள், புதிய தொழில் முனைவோர்கள் முதல் முயற்சியாய் ஏற்றுமதி செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்காக ஒரு சிறப்புக்கூட்டம் சேம்பர் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. நமது பாரத தேசத்தின் வங்கக்கடல் பகுதியில், 1200 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அந்தமான். நமது நாட்டின் எல்லைக்குட்பட்டது. அங்கு செல்வதற்கு விசா பெற வேண்டும் என்பது அவசியமில்லை. ஏழைகளின் ஊட்டி, ஏற்காடு என்பது போல, நடுத்தர வர்க்கத்தினர் கடல் கடந்து விமானத்தில் சுற்றுலா செல்ல விரும்பினால், அந்தமான் ஓர் அருமையான சுற்றுலா தளம் ஆகும்.

இந்த அந்தமானில் தொழில் வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்வதற்கான கூட்டம் கடந்த 05.10.2021 – செவ்வாய்க்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் ஜூம் காணொலி வழியாக நடத்தப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக அந்தமான் துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர் திரு. **டி.என். கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். செயற்குழு உறுப்பினர் திரு. **T.R.சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார். செயற்குழு உறுப்பினர் திரு. **V.V. ராம்லக்ஷ்மண்** அவர்களின் முயற்சியில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

திரு. **V.V. ராம்லக்ஷ்மண்** அவர்களின், சிறப்பு விருந்தினர் அறிமுகத்திற்குப் பிறகு பேசிய திரு. **டி.என். கிருஷ்ணமூர்த்தி** அவர்கள், இந்த அருமையான வாய்ப்பை அளித்த சேம்பருக்கு நன்றி கூறி, தாம் அந்தமானில், அரசின் ஒரு கப்பல் பொறியாளராக இருந்து கொண்டு, இங்கு இருக்கும் தொழில் வாய்ப்புகளை, தமக்குத் தெரிந்த தரவுகளின் அடிப்படையில் நம்முடன் இந்த நிகழ்ச்சியில் பகிர்ந்து கொள்வதாக தெரிவித்தார்.

அழகிய சுற்றுலா தளமான அந்தமானில் 35 தீவுகள் உள்ளன. 2001ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, 3 லட்சம் மக்கள் வசிப்பதாக கூறப்படுகிறது. தற்போது தோராயமாக 4 முதல் 5 லட்சம் மக்கள் தொகை இருக்கலாம். 22 வகையான மொழியினத்தவர்கள் இங்கு உள்ளனர். அதில், ஹிந்தி பேசக்கூடியவர்கள் முதலிலும், பெங்காலி இரண்டாவது இடத்திலும், மூன்றாவதாக தமிழ் பேசக்கூடியவர்கள் அதிகமாக உள்ளதாக தெரிவித்தார். இங்கு தமிழ் பேசக்கூடியவர்கள் சற்று ஹிந்தி கலந்து பேசக்கூடியவர்களாக இருப்பார்கள்.

அந்தமானில் தொழில் புரிய வாய்ப்புள்ள துறைகள் என்றால், அன்றாடத் தேவை, சுற்றுலா, உள் கட்டமைப்பு வசதிகள், மீன்பிடிப்பு, கப்பல் துறை, மின்சாரம், தகவல் தொழில் நுட்பம், பிற தீவுகளின் தேவைகள் ஆகும். இங்கு நல்ல இணைய வசதி உள்ளது, அரசியல் குறுக்கீடுகள் இல்லை, படித்தவர்கள் அதிகம், பேரம் பேசுவதில்லை, பிச்சைக்காரனே இல்லை, தனிநபர் வருமானம் அதிகம், குற்றங்கள் குறைவு. இவை சாதகமான சூழல்களாகும். மக்கள் தொகை குறைவு, 8 மாதம் மழை, தண்ணீர் பஞ்சம் 4 மாதங்கள், மாறாத மக்கள் குணம், பல மாநில மக்கள் மனநிலை, ஆடம்பரமில்லா மக்கள், மொபைல் தொந்தரவு, மின்வசதி ஜெனரேட்டர் மூலம் கிடைப்பது போன்றவை பாதகமான சூழல்களாகும் என்றும் தெரிவித்தார்.

இவை தவிர, நம் சமூகத்தவர்கள், அந்தமானில் வாழும் விபரங்களையும், அந்தமான், முற்காலம் மற்றும் இக்காலத்தின் சரித்திரத்தையும் கூறி நம்மை நெகிழ வைத்தார். அதோடு, தாம் தற்போது அந்தமானில், அந்தமான் தமிழர் சங்கத்தின் தலைவராகவும் இருப்பதாகத் தெரிவித்தார். இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சியும் அந்தமானிலும் செயல்படுவதாகத் தெரிவித்தார். வெற்றி என்பது ஒரு பயணம், சேரும் இடமல்ல என்பதைக்கூறி, இளைய தொழில் முனைவோர்கள் இந்த தகவலைக் கொண்டு, தங்களின் சொந்த முயற்சியில், தொழிலை விரிவுபடுத்திட ஊக்கமளித்தார். இதற்கு தம்மால் இயன்ற உதவியை அளிப்பதாக தெரிவித்து தமது உரையை நிறைவு செய்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் பலரின் கேள்விக்கு மிக அருமையாக பதிலளித்தார்.

இறுதியாக, சேம்பர் பொதுச்செயலாளர் திரு.**K.K.தினேஷ்** அவர்கள் நிகழ்ச்சிக்கு கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர் மற்றும் அங்கத்தினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.




முகக்கவசம் இறுக்கமாக இல்லாமல் சற்றே தளர்வாக இருப்பது நல்லது.


PANDIAN
PERFORMANCE CHEMICALS
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098
Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care
droplets
PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED
ALPHA OLEPHIN SULPHONATES
SODIUM LAURYL ETHER SULPHATES
SODIUM LAURYL SULPHATES
CETOSTEARYL ALCOHOLS
FATTY ALCOHOLS
OLEO CHEMICALS
POLYMERS
PERFORMANCE CHEMICALS &
FRAGRANCES
Dealers in
Godrej
Godrej Industries Limited
IFF
International Flavours & Fragrace Pvt. Ltd
K K Dinakaran
www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com
Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831



நமது
ஸௌராஷ்ட்ர
சேம்பர் ஆப் காமர்ஸ்-ன்
போஷக அங்கத்தனரான திரு.
**N.M.R. ஜவகர் பாபு** அவர்கள்
மதுரை காந்தி மியூசியத்தில்
நடைபெற்ற தேர்தலில்
துணைத்தலைவராக தேர்வு
செய்யப்பட்டுள்ளார் என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவத்துக்கொள்கிறோம்.
அவருக்கு சேம்பர் சார்பாக
மனமார்ந்த வாழ்த்துகள்.





நமது
ஸௌராஷ்ட்ர
சேம்பர்-ன் சிறப்பு
அழைப்பாளர் திரு. **V.R.
சேகர்** மதுரை பிளாஸ்டிக்
உற்பத்தியாளர்கள் சங்கத்தில்
நடைபெற்ற தேர்தலில் துணைத்
தலைவராகவும், சேம்பர் செயற்குழு
உறுப்பினரான திரு. **N.S. பிரேம் குமார்**
இணைச்செயலாளராக தேர்வு
செய்யப்பட்டுள்ளனர். இருவருக்கும்
சேம்பர் சார்பாக மனமார்ந்த
வாழ்த்துகள்.

## வெளி அமைப்புகளின் தேர்தலில் வெற்றிபெற்ற சேம்பர் அங்கத்தினர்களுக்கு வாழ்த்துகள்



நமது
சேம்பர்-ன்
சிறப்பு அழைப்பாளரான
திரு. **P.J. பன்சிதர் பாபு** மதுரை
மடீட்சியாவில் நடைபெற்ற தேர்தலில்
இணைச் செலயாளராகவும், சேம்பர்
செயற்குழு உறுப்பினர் திரு.**A.B. குமரேஷ்
பாபு,** சிறப்பு அழைப்பாளர்கள் திரு. **B.V.
குப்புராஜ்** & திரு. **K.K. சங்கர்** ஆகியோர்
செயற்குழு உறுப்பினராக தேர்வு
செய்யப்பட்டுள்ளனர். இருவருக்கும்
சேம்பர் சார்பாக மனமார்ந்த
வாழ்த்துகள்.







## Health Insurance Scheme for WEAVERS

### Eligibility

- Should be an Indian Citizen
- The Weaver should be earning at least 50% of his income from handloom weaving
- All weavers, whether male of female, are eligible to be covered under the "Health Insurance Scheme"

### Benefits

The beneficiaries would avail a package of Rs. 15,000 that included both pre-existing diseases and new diseases. The division in terms of disubursement of the amount according to the medical conditions stands as - Maternity benefit (per child for the first two) - Rs. 2500, Eye treatment - Rs. 75, Spectacles - Rs. 250, Domiciliary Hospitalisation - Rs. 4000, Ayurvedic/Unani/Homeopathy/Siddha - Rs. 4000, Hospitalization (Including pre and post) - Rs. 15000, Baby Coverage - Rs. 500, OPD and limit per illness - Rs. 7500.




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

**Head Office :**
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

**Branch Office :**
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

UIN No. Applied
MFG. No. 8/25 D

பிளாஸ்மோடின் கேப்ஸ்ல்ஸ் 500 mg.
எதிர்ப்பு சக்தி அதிகரிக்க

PLASMODIN CAPSULES 500 mg.
Increase Immunity Power



Prop. : B.K.D. Suresh

4/150, Virathanur Road, Ayyanarpuram, Paniyur Post, Madurai - 9. Mobile : 93607 96538


முகக்கவசம் இறுக்கமாக இல்லாமல் சற்றே தளர்வாக இருப்பது நல்லது.

# அவசரகால கடன் உத்தரவாத திட்டம் (ECLCG) 31.03.2022 வரை நீட்டிப்பு

அவசரகால கடன் உதவி திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து 1.15 கோடிக்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு நிவாரணம் கிடைத்துள்ளன.

கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து, தொழிலதிபர்கள் தங்கள் தொழிலை மீண்டும் தொடங்க, தகுதியான கடன்தாரர்களுக்கு இத்திட்டம் கடனுதவி வழங்கியது. இத்திட்டத்தின் கீழ், 2021 செப்டம்பர் 24ம் தேதி வரை வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 2.86 லட்சம் கோடியை தாண்டியது. மொத்தம் வழங்கப்பட்ட கடன் உத்திரவாததத்தில், 95 சதவீதம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

தகுதியான தொழில் துறைகளுக்கு தொடர்ந்து கடனுதவியை உறுதி செய்ய, அவசரகால கடன் உதவி திட்டத்தை நீட்டிக்க வேண்டும் என அரசுக்கு பல தொழில் துறை அமைப்புகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்தன. அதனால் இத்திட்டத்தை **31.03.2022** வரை நீட்டிக்கவும், அல்லது இத்திட்டத்தின் கீழ் உத்திரவாத கடன் தொகை ரூ. 4.5 லட்சம் கோடி இலக்கை எட்டுவது இதில் எது முன்போ அதுவரை இத்திட்டத்தை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் **கடன் வழங்குவதற்கான கடைசி தேதி 30.06.2022 வரை நீட்டிக்கப் பட்டுள்ளது**. கொரோனா இரண்டாம் அலையால் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் இத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. அவை...

**The following modifications have been made in the scheme to enable support to businesses impacted by the second wave of COVID**

- Existing borrowers under ECLGS 1.0 & 2.0 would be eligible for additional credit support of upto 10% of total credit outstanding as on 29.02.2020 or 31.03.2021, whichever is higher.
- Businesses who have not availed assistance under ECLGS (ECLGS 1.0 or 2.0), can avail credit support of upto 30% of their credit outstanding as on 31.03.2021.
- Businesses in sectors specified under ECLGS 3.0, who have previously not availed ECLGS, can avail credit support up to 40% of their credit outstanding as on 31.03.2021, to the maximum of Rs.200 crore per borrower;
- Incremental credit can be availed within these limits by existing ECLGS borrowers whose eligibility increased because of change in cut off date to 31.03.2021 from 29.02.2020.
- Accordingly, Borrowers who have availed assistance under ECLGS and whose credit outstanding as on 31.03.2021 (excluding support under ECLGS) is higher than that on 29.02.2020 shall be eligible for incremental support within the cap stipulated under ECLGS 1.0,2.0 or 3.0.

The modification introduced would ensure that businesses adversely impacted by the second wave of COVID 2019 get enhanced collateral free liquidity . Further this provides much needed support to all the ECLGS borrowers (which mainly consist of MSME units) in time for the busy / festival season.

The revised operational guidelines in this regard are being issued separately by National Credit Guarantee Trustee Company Limited (NCGTC).

**- PIB News**

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** இடுப்பு மூட்டில் தீவிர வலி இருந்தால் என்ன சிகிச்சை எடுக்கலாம்?

**பதில்:** இது போன்ற பிரச்சனை வந்தால் 'டைஸ்பிளாஸ்டிக் ஹிப்' எனும் நோய் உள்ளதாக அர்த்தம். குழந்தை பருவத்திலேயே சிகிச்சை எடுத்திருக்க வேண்டும். இந்நோய் உள்ளவர்களுக்கு இடுப்பு மூட்டின் வடிவம் சீர்குலைந்து இருக்கும். இதற்கு நவீன சிகிச்சை இடுப்பு மூட்டின் வடிவத்தை மாற்றும் மூட்டு மாற்று சிகிச்சை ஆகும். இதன் மூலம் இயல்பான வாழ்க்கைக்கு திரும்பலாம்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Cell: 90805 54802, 99424 90217



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com



# JRD TATA

## கொடுத்துச் சிவந்த கரங்கள் கொண்ட தொழிலதிபர்

**"எந்த வேலையும் அரை மனதுடன் தொடங்க வேண்டாம். எப்போதும் நம்பிக்கையுடன் தொடங்குங்கள். நீங்கள் வெற்றி பெறும்போது சமூகத்திற்கு எதையாவது திருப்பிச் செலுத்துங்கள். சமூகம் நமக்கு நிறைய தருகிறது. நாமும் அதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்".** ஜே.ஆர்.டி. டாடா இந்த மதிப்புமிக்க ஆலோசனையை இன்ஃபோசிஸ் நிறுவனர் நாராயண மூர்த்தியின் மனைவி சுதா மூர்த்தி, தனது கனவருடன் இணைந்து இன்போசிஸிஸ் அடித்தளத்தை அமைப்பதற்காக டெல்கோவை விட்டு வெளியேறிய போது கூறினார்.

ஜுலை 29, 1904-ல் பாரிஸில் பிறந்த ஜே.ஆர்.டி டாடா, ரத்தன்ஜி தாதாபாய் டாடா, சூஸன் பிரெயின் இரண்டாவது குழந்தை. இவரது தந்தை ரத்தன்ஜி நாட்டின் முன்னணி தொழிலதிபர் ஜாம்செட்ஜி டாடாவின் உறவினர். அவரது தாயார் பிரெஞ்சுக்காரர் என்பதால், அவர் தனது குழந்தைப் பருவத்தின் பெரும்பகுதியை பிரான்சில் கழித்தார். கேம்பிரிட்ஜில் பொறியியல் படிப்பை முடித்த பின்னர், பிரெஞ்சு இராணுவத்தில் ஒரு வருடம் கட்டாய இராணுவப் பயிற்சி பெற்றார். அவர் இராணுவத்தில் சேர ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் அவரது தந்தை அவரை மீண்டும் இந்தியாவுக்கு அழைத்தார்.

1925-ல் அவர் சம்பளமின்றி, ஒரு பயிற்சியாளராக டாடா சன்ஸ் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அவரது கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சியின் காரணமாக, 1938-ல் 34 வயதில் டாடா குழுமத்தின் தலைவரானார். இது இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலமாகும்.

ஜே.ஆர்.டி, ஒருமுறை, தான் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் சேர விரும்புவதாகக் கூறினார். ஆனால் பின்னர் நாட்டில் தொழில்மயமாக்கலை ஊக்குவிப்பதன் மூலம் தேசத்திற்கு சிறப்பாக சேவை செய்ய முடியும் என்று கருதியதால் அந்த எண்ணத்தைக் கைவிட்டார்.

ஜே.ஆர்.டி டாடா குழுமத்தின் தலைவரானபோது, அதன் கீழ் 14 நிறுவனங்கள் இருந்தன. ஜுலை 26, 1988 அன்று அவர் தலைவர் பதவியில் இருந்து விலகிய போது, டாடா குழுமம் 95 நிறுவனங்களின் மிகப்பெரிய கூட்டு நிறுவனமாக உருவெடுத்திருந்தது. டாடா குழுமத்தின் ஆண்டு வர்த்தகப் பணப்புழக்கம் ரூ. 680 கோடியிலிருந்து 34 ஆயிரம் கோடியை எட்டியிருந்தது.

நிர்ணயிக்கப்பட்ட ஊழியர்களுக்கான வருங்கால வைப்பு நிதிக்கொள்கை ஊழியர்களின் நலனை நோக்கமாகக் கொண்ட அவரது மிக முக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாகும். தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டால் ஊழியருக்கு இழப்பீடு வழங்குவதற்கான விதி அவரது சிந்தனையின் தாக்கம் காரணமாக சட்டத்தின் ஒரு பகுதியாகவே மாறிவிட்டது. தொழிற்சாலைகளுக்கான கார்ப்பரேட் மனித வள கலாச்சாரத்தைத் தொடங்கிய பெருமை அவரையே சாரும்.

அவரது மகத்தான பங்களிப்புக்காக, அவருக்கு 1957ம் ஆண்டில் பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டது. முதல் வணிக விமானி என்ற சிறப்பையும், ஏர் இந்தியா பறக்க தளம் அமைத்தவர் என்ற தனித்துவமான சிறப்பையும் பெற்றவர். இந்தியாவில் விமானப் பயணத்தை முன்னெடுத்தது, ஜே.ஆர்.டி., டாடா ஏர்லைன்ஸ் என அழைக்கப்படும் இந்தியாவின் முதல் தேசிய விமான சேவை தொடங்கியதற்கும் அவரே காரணம். பின்னர் ஏர் இந்தியா என மறுபெயரிடப்பட்டது.

1948ம் ஆண்டில் விமானப்படையால் கௌரவ குழு கேப்டன் பதவி ஜே.ஆர்.டிக்கு வழங்கப்பட்டது. பின்னர் அவர் அக்டோபர் 1968-ம் ஆண்டில் ஏர் கமாண்டராக பதவி உயர்வு பெற்றார். இறுதியாக 1974ம் ஆண்டில் கௌரவ ஏர் வைஸ் மார்ஷல் ஆனார். 1962-ல் நடந்த இந்தோ-சீனா போர் உச்சத்தில் இருந்த போது அவர், இராணுவத்தில் புதிய ஆட்களை நியமிப்பதற்காக பிரதமரின் தேசிய பேரிடர் நிவாரண நிதிக்கு 30 லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார்.

டாடா இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சயின்சஸ், டாடா மெமரியல் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் மற்றும் மருத்துவமனை, அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம், தேசிய கலை நிகழ்ச்சிகளுக்கான மையம் மற்றும் தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனம் ஆகியவற்றை நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்த பெருமை இவருக்கு உண்டு. மக்கள்தொகை கட்டுப்பாடு குறித்து ஊக்குவிப்பதில் சிறந்த பங்காற்றியமைக்காக 1992ல் அவருக்கு மதிப்புமிக்க ஐ.நா. மக்கள் தொகை விருது வழங்கப்பட்டது. 1992ல் இந்தியாவில் மிக உயர்ந்த சிவில் கௌரவ விருதான பாரத ரத்னாவைப் பெற்ற நாட்டின் ஒரே தொழிலதிபர் இவர்தான். அவர் நவம்பர் 29, 1993 அன்று தனது 59வது வயதில் காலமானார்.

– நியூ இந்தியா ஸமாச்சார்


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ் பொட்டிக்
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்
158 & 158A தெற்கு மாசி வீதி, மதுரை-1. CELL: 92445 00633 | 99433 79499
EXPRESS BRIYANI
Cell: 63852 96296
Anna Nagar | B.B. Kulam
Kalavasal | Villapuram
South Marret Street

https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be






பணியிடமும் பணிசார்ந்த சூழலும் மிகவும் முக்கியமானது. தினமும் 8 மணி நேரம் முதல் 10 மணி நேரத்தைப் பணியிடத்திலேயே செலவிடுகிறோம். அதனால், அங்கு பணிபுரியும் சக பணியாளர்களுடன் இணக்கமான நல்லுறவைப் பேணுவது பணிக்கு மட்டுமல்லாமல் நம் மன அமைதிக்கும் உதவும்.

நாம் பணிபுரியும் இடத்தில் அனைவரும் நம்மைப் போலவே இருப்பார்கள் என்ற எண்ணத்தை முதலில் புறந்தள்ள வேண்டும். பள்ளி கல்லூரிகளில் ஒவ்வொரு மாணவரும் ஒருமாதிரி இருப்பதைப் போலவே, நிறுவனத்தில் ஒவ்வொரு பணியாளரும் வெவ்வேறு குணநலன்களைக் கொண்டிருப்பர். ஆனால், அனைவருடனும் ஓரளவுக்கு இணக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சில பணியாளர்கள் ஆர்வக் கோளாறுடன் இருப்பார்கள். நிறுவனத்தின் எல்லா செயல்களிலும் தாம்தான் முன்னிலை பெற வேண்டும் என்ற பேரவா கொண்டிருப்பார்கள். அடுத்தவர்கள் செய்யும் வேலையையும் தாமே செய்ததாகக் கூறி நற்பெயர் வாங்க முயல்வார்கள். அதுபோன்ற ஆர்வக்கோளாறு மிக்க பணியாளர்களின் செயல்பாடுகள் நமக்கு சில சமயங்களில் வெறுப்பை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளன. அது நமக்கு எத்தகைய மனிநிலையை ஏற்படுத்துகிறது என்பதை அவர்களிடம் நேரடியாகக் கூறிவிடுவது நல்லது.

நிறுவனம் சார்ந்த விவகாரங்கள் அனைத்திலுமே சம்பந்தப்பட்ட நபர்களிடம் நேரடியாகக் கருத்து தெரிவிப்பது சிறப்பு. அதை மனதுக்குள் வைத்துக்கொண்டால் அதுசார்ந்த வன்மம் அதிகரித்து சக பணியாளர்களுடனான உறவு சிதைந்துவிடும் அபாயம் உள்ளது. அதே வேளையில், அதிருப்திகளை சக பணியாளர்களிடம் கூறும்போது இணக்கமான முறையில் தெரிவிக்க வேண்டும்.

சக பணியாளர்கள் குறித்த செயல்பாடுகளை அவர்களிடமே குற்றச்சாட்டாகக் கூறக் கூடாது. அது குறித்து அவர்களிடம் கூறவும் வேண்டும். ஆனால், அவ்வாறு கூறுவதால் உறவும் பாதிக்கப்படக் கூடாது. அதை மனதில் வைத்து, எவ்வாறு எந்த சமயத்தில் கூற வேண்டுமோ அதைத் தெளிவாக முடிவு செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக்கூறியும் அவர்களது செயல்பாடுகளில் மாற்றமில்லை எனில், அது தொடர்பாக நிறுவன மேலாளரிடம் கூறிவிடலாம். அதையும் புகாராகக் கூறாமல் பணிசார்ந்த முழுத்திறனை வெளிப்படுத்துவதற்கு இடையூறாக இருப்பது போன்றும் சக பணியாளரின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை போன்றும் கூறலாம்.

சக பணியாளர்களுக்கு உதவும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளலாம். முக்கிய திட்டங்களைச் செயல்படுத்துதல், கூட்டங்களில் உரையாற்றுதல் உள்ளிட்ட விவகாரங்களில் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யலாம். சில பணியாளர்கள் மற்றவர்களிடம் உதவி கேட்பதை விரும்பமாட்டார்கள். அத்தகையவர்கள் கேட்காதபோதும் நாம் முன்சென்று உதவலாம். சக பணியாளர்கள் திறம்படச் செயலாற்றுவதற்கான சிறு முயற்சிகளை மேற்கொள்ளலாம். அவர்கள் சிறப்பாகப் பணியாற்றினால் பாராட்டுவது, சில தவறுகள் செய்தால் நல்ல முறையில் கூறி அவற்றைத் திருத்துவது ஆகியவற்றைச் செய்யலாம்.

அதேபோல், மற்ற பணியாளர்கள் குறித்து தவறாகப் பேசுவதையும் குற்றஞ்சாட்டுவதையும் அறவே தவிர்த்து விடலாம். நம்முடைய பணியை முறையாகச் செய்ய வேண்டும். நேர்மையாகவும் பொறுப்புணர்வுடனும் நடந்து கொள்ளுங்கள். திறன்களை மென்மேலும் மேம்படுத்தி சிறப்பாகச் செயல்பட்டு வந்தால், நம்மைப் பற்றிய அபிப்ராயம் சக பணியாளர்களுக்கு அதிகரிக்கும். அத்தகைய சூழலே சக பணியாளர்களுடன் இணக்கமான உறவைப் பேணுவதற்கு உதவிகரமாக இருக்கும்.

மற்ற பணியாளர்களுடன் ஆரோக்கியமான போட்டிச் சூழல் நிலவுவதை ஊக்குவிக்கலாம். அந்தப் போட்டி நம்மையும் திறம்படச் செயல்படுவதற்கு ஊக்குவிக்கும். அத்தகைய போட்டி சக பணியாளர்களுடனான நல்லுறவுக்கு ஆபத்தாக மாறிவிடாமல் இருப்பதையும் உறுதி செய்துகொள்ள வேண்டும். சக பணியாளர்கள் தொடர்பான ஆவணங்கள், செல்லிடப்பேசி உரையாடல்கள், மின்னஞ்சல்கள் உள்ளிட்டவற்றை நீக்கிவிடாமல் வைத்துக்கொள்வது நல்லது. ஒருவேளை சக பணியாளர்கள் நம் மீது தேவையற்ற குற்றச்சாட்டுகள் எழுப்பினாலும், உரிய ஆதாரங்களைக் காண்பித்து அவற்றைப் பொய்யென நிரூபிக்க முடியும். மற்ற பணியாளர்களுடன் நல்லுறவைப் பேணுவதற்கு நாம் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் சிலர் அவற்றையெல்லாம் உதாசீனப்படுத்துவார்கள். நம்முடன் உறவைப் பேணுவதற்கு அவர்களுக்கு விருப்பமில்லாமல் இருக்கலாம். அது குறித்து பெரிதாகக் கவலை கொள்ளத் தேவையில்லை.

– தினமணி



# புல்லாங்குழலில் புலமைபெற்ற வித்தகர்

https://youtu.be/dbmcl_4MY3Y

நெசவுத் தொழிலை மட்டுமே பிரதானமாக கொண்டு வாழ்ந்து வந்த நம் ஸௌராஷ்ட்ர சமுதாய மக்கள் இன்று பல்வேறு துறைகளில் கால்பதித்து சாதித்து வருகின்றனர். அந்த வகையில், இன்று காணப்போகும் நபர், ஒரு புல்லாங்குழல் தயாரிப்பாளர். புல்லாங்குழல் தயாரிப்பாளர் என்று கூறியவுடன் நமக்கே புதுமையாகவும், இனிமையாகவும் தோன்றுகிறதல்லவா!..

ஆம், நம் சமூகத்தில் யாரும் நுழையாத ஒரு தொழில் துறை. இசையின் மீது நாட்டம் கொண்ட பாகவதர்கள் பலர் நம் சமுதாயத்தில் இருந்தாலும் இசைக்கருவியை தயாரிக்கும் துறையில் இவர் ஒருவரே நிலையாக இருக்கிறார் என்றால் வியப்பாகவும் பெருமையாகவும் உள்ளது.

இசைத்துறையின் முன்னோடிகள் பலர் இவரின் கைதேர்ந்த தயாரிப்பால் உருவாகும் புல்லாங்குழலையே வாங்கி வருகிறார்கள் என்றால் இவரது தயாரிப்பின் திறமையை நாம் தெரிந்துகொள்ளவும், இவரது பெயரையும், தயாரிப்பையும் நம் சமூக மக்களும் அறிந்து கொள்ள வேண்டியும் இந்த நேர்காணலை நமது சேம்பர் இதழ்குழுவினர் நடத்தியுள்ளனர்.

இப்புதுமையான துறையில், திறமையாக நடத்திவருபவர் தான் திரு. **P.V. கிருஷ்ணாராம்.**

**'பரசுமன்னா'**, இவரது வீட்டு பெயர். **'பரசுமன்னா நாகய்ய பாகவதர்'** இவரது பாட்டனார் ஆவார். அவர்,



நாயகி சுவாமிகளுடன் பரசுமன்னா நாகய்ய பாகவதர்

ஸ்ரீ நடன கோபால நாயகி சுவாமிகளின் பிரதான சிஷ்யர் பரசுமன்னா நாகய்ய பாகவதர்



P.N. வெங்கடாஜலபதி

பரசுமன்னா நாகய்ய பகவதர் மகன் பரசுமன்னா வெங்கடாசலபதி சவுராஷ்ட்ரா கூட்டுறவு வங்கியின் முதல் செயலாளர், மதுரை, தமிழ்நாடு.

ஸ்ரீமந் நடன கோபால நாயகி சுவாமிகளின் பிரதான சீடரும் ஆவார். இவரது தந்தை **பரசுமன்னா P.N. வெங்கடாஜலபதி** ஆவார். இவர் சௌராஷ்ட்ர கூட்டுறவு வங்கியின் முதல் செயலாளர் ஆவார். இவரது மகன் திரு. **P.V. கிருஷ்ணாராம்** ஆவார். இவர் பாட்டானாரின் ஆசியுடன் இன்று புல்லாங்குழல் தயாரிப்பிலும், இசையிலும் ஞானம் பெற்ற வித்தகராக திகழ்கிறார். இவருக்கு மனைவி மற்றும் இரண்டு மகள்கள்.

இவரின் புல்லாங்குழல் தயாரிப்பிற்கான ஈடுபாடு இசையின் மீது கொண்ட அளப்பரிய ஆசை காரணமாகவே புல்லாங்குழல் துறையில் இவரை ஈடுபடச் செய்துள்ளது.

பணம் சம்பாதிப்பது என்ற பிரதான நோக்கம் மட்டுமே கொள்ளாமல் மக்கள் இசையின் தெய்வீகத்தன்மையை உணர, துல்லியமான இசைக்கருவிகளால் தான் என்பதை கருதி, இவர் தயாரிக்கும் புல்லாங்குழலை



https://youtu.be/ECD_1sThqio

இவரின் கைவண்ணத்தில் மிக நேர்த்தியாக தயாரித்து வருகிறார். இவரின் திறமையை இசைத்துறையில் உள்ளவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். பிற மாநில மொழி திரைப்படங்களில் இவரது புல்லாங்குழலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் இவரின் திறமையை நம் சமூக மக்களும் அறிந்துகொள்ள வேண்டும்.

இவர் இத்துறையில், முன்னோர்கள் மற்றும் பெரியோரின் ஆசியுடனும், விடாமுயற்சியும், கடின உழைப்புடன் 40 வருடங்களாக உள்ளார். 40 ஆண்டு அனுபவத்தை கொண்டு செல்லும் புல்லாங்குழல்கள் ஒருமுறை வாங்கியவர்கள் தரத்தை அறிந்து மீண்டும் மீண்டும் தேவைகளை வாங்குகிறார்கள்.

**அறிவுக்கம்பனின்** பாடலால் ஈர்க்கப்பட்டு தானும் கர்நாடக இசையை முறைப்படி கற்றுக்கொள்ள வேண்டும் என விரும்பி மதுரை **S.S. ராமகிருஷ்ண பாகவதரிடம்** 1972-ல் முறைப்படி கர்நாடக இசையை கற்றுக் கொண்டார். மேலும் இயல்பாகவே புல்லாங்குழல் வாசிக்கும் திறன் பெற்றிருந்ததால் புல்லாங்குழல் **வித்வான் வேணுகோபால்** அவர்களிடம் முறைப்படி புல்லாங்குழல் கற்றுக்கொண்டார். புல்லாங்குழல் செய்வதில் இவருடைய திறமையை அறிந்துகொண்டு யாருக்கும் கிடைக்காத வரம் என்று கூறி முழுமையாக புல்லாங்குழல் தயாரிக்க ஆசிர்வதித்து ஊக்கம் அளித்தார்.

வெறும் புல்லாங்குழல் தயாரிக்கும் நேர்த்தியை மட்டுமே அறிந்து தயாரிக்காமல், இசையின் உன்னதத்தை உணர்ந்து இசை ஞானத்துடன் தயாரிக்கப்படும்போது, இவரின் படைப்பு ஒரு முழுமையையும், உயிராற்றலையும் பெறுகிறது.

புல்லாங்குழலை சாதாரணமாக பார்க்கும் நமக்கு மூங்கிலை கொண்டு நாமும் நான்கு துளைகளை இட்டு தயாரித்துவிடலாம் என்று தோன்றுகிறது. ஆனால், உண்மையில், ஒரு புல்லாங்குழலை தயாரிக்க எந்த வகை மூங்கிலை தேர்வு செய்ய வேண்டும், அது எந்த அளவில் உருவாக்க வேண்டும், எத்தனை துளைகள் இட வேண்டும், துளைகளின் அளவு, ஒவ்வொரு துளைக்குமான இடைவெளி, இதில், சிறுவர்கள் / பெரியவர்கள் என்றால் அளவுகோல்கள் மாறுபடும் அதோடு, இசைத்துறையினருக்கு தகுந்தாற்போல கருவியும் மாறுபடும் என்று கூறும்போது, புல்லாங்குழல் தயாரிப்பில் இத்தனை விஷயங்கள் அடங்கியிறுக்கிறதா!!!... என்று நினைக்கும்போது நம்மை வியப்பில் ஆழ்த்தியது.

நமது பாரத தேசத்தில், இரண்டு விதமான இசைப்பிரிவினர்கள் உள்ளனர். ஒன்று, ஹிந்துஸ்தானி, மற்றொன்று தென் இந்திய முறை (South Indian Music) ஹிந்துஸ்தானி முறையில், 6 அல்லது 7 துளைகள் புல்லாங்குழலில் இருக்கும். தென் இந்திய முறையில், 8 துளைகள் புல்லாங்குழலில் இருக்கும். இவ்விரண்டிற்கு பொதுவாக மூன்று வகைகளில் புல்லாங்குழல்கள் தயாரிக்கப்படுகின்றன. **கீழ்ஸ்தாயி**(Base), **மத்திமஸ்தாயி**(Middle) & **உச்சஸ்தாயி**(Top) இந்த மூன்று பிரிவு புல்லாங்குழல்களுக்கு தகுந்தாற்போல உயர அளவுகள் மாறுபடும். அந்த வகையில் மொத்தம் 29 வகை புல்லாங்குழல்கள் தயாரிக்கப்படுவதாக தெரிவித்தார். அதன் ஒவ்வொன்றுக்குமான துளை அளவும் அதற்கேற்றார்போல மாறுபடும் என்று தெரிவித்தார்.

புல்லாங்குழலை முதலில் பயிற்சி பெறுவோர் மற்றும் குழந்தைகள் Middle Level ரகத்தை தேர்வு செய்யலாம். பொதுவாக பெரும்பாலானோர் பயன்படுத்தக்கூடியது Middle Level ரக புல்லாங்குழல் ஆகும். Base Level ரக புல்லாங்குழலின் ஒலி மென்மையாக எழும்பும். Top Level ரக புல்லாங்குழல்களின் ஒலி கீச்சென்று எழும்பும். மேற்படி மூன்று ரக புல்லாங்குழலையும் மிக அழகாக வாசித்தும் காண்பித்தார்.

ஒரு புல்லாங்குழலின் தரத்தை அதன் **'கணு'**வை வைத்தே அறிய முடியும் என்று கூறினார். புல்லாங்குழலின் மேல்-உள் பகுதியில் **கார்க்** இருந்தால், அது **ஹிந்துஸ்தானி** ராகம் பாடும் பிரிவினருக்குரிய புல்லாங்குழல் வகை ஆகும் என்றும் தெரிவித்தார்.

ஒவ்வொன்றும் மிகவும் கச்சிதமான தயாரிப்புகள். அதிகமாக ஒருநாளைக்கு தம் கைகளாலேயே நான்கு புல்லாங்குழலை தயாரிக்க முடியும் என்று தெரிவித்தார். பொதுவாக **'மைகலி'** எனும் மூங்கில் வகையில் தான் புல்லாங்குழல் தயாரிக்கப்படும். இந்த வகை மூங்கில் மட்டுமே புல்லாங்குழல் தயாரிக்க உகந்ததாக தெரிவித்தார். ஒரு புல்லாங்குழலை தயாரித்தப்பிறகு அதன் ஒலியை சோதிப்பதற்கென்று ஒரு தனி கருவியைக்கொண்டு அளவிட்டு அதன் பின்னரே அப்புல்லாங்குழல் விற்கப்படுவதாக கூறினார்.

திரு. P.V. **கிருஷ்ணாராம்** அவர்கள் கொண்டுள்ள இசை ஆர்வத்தைப்போலவே, அவரது இரண்டாவது மகள் திருமதி. **ஷாலினி கிரிஷ்சந்தர்** அவர்களும் புல்லாங்குழலை மிக அழகாக வாசிக்கிறார். திருமதி. **ஷாலினி கிரிஷ்சந்தர்** அவர்களின் முயற்சியில்,



சுருதி சாகர் பன்சூரி (Find us on Youtube Channel: Suruthi Sagar Bansuri) என்ற பெயரில் யூ-டியூப் சேனல் துவக்கி பல இசைக் கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்களின் கவனத்திற்கு கொண்டு சேர்த்துள்ளார். சமூக வலைதளங்களான Facebook(Flute), IndiaMart(Online Shopping), Youtube(Suruthi Sagar Bansuri) and Instagram(Shalinigirishchand) ஆகியவற்றில் இவருடைய புல்லாங்குழல் சம்மந்தமான அனைத்து தகவல்களையும் அறியலாம்.


திரைப்படத்துறையினர்கள், இசைக்கலைஞர்கள், இசைக்கல்லூரித்துறையினர்கள், Concert & கச்சேரி செய்பவர்கள் விரும்பி வாங்குகின்றனர். தமிழ் திரைப்படமான **'ஒரு நாள் கூத்து'** படத்தின் பிரபலமான **'அடியே அழகே'** என்று துவங்கும் பாடலுக்கு இவரது புல்லாங்குழலே பயன்படுத்தப் பட்டுள்ளது.

இவரின் புல்லாங்குழல் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, போன்ற வெளிநாட்டிற்கும், குளு மணாலி, மும்பை, குஜராத் போன்ற வெளி மாநிலங்களுக்கும், தென் இந்தியாவின் பல பகுதிகளில் வாழும் பல்வேறு இசை ஆர்வலர்கள் மற்றும் கலைஞர்கள் வாங்கி வருகின்றனர். சென்னை மற்றும் சிங்கப்பூர் இசைப் பயிற்சி பள்ளிகள் இவரிடமே விரும்பி வாங்குகிறார்கள்.

புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான, டாக்டர். **என்.ரமணி**, திரு. **கே.எல். ஸ்ரீராம்**, குடமலூர் **ஜனார்த்தனன்**, திருமதி. **மதுரா**, திருமதி. **பூமா பார்த்தசாரதி**, **நிரஞ்சன் பாண்டியன்**, மைசூர் **சந்தன் குமார்** போன்றோர் இவரின் தயாரிப்பை வியந்து பாராட்டி விரும்பி வாங்குகின்றனர். குறிப்பாக, திரு. **கே.எல். ஸ்ரீராம்** அவர்கள் இவர் தயாரிக்கும் புல்லாங்குழலில் இருந்து எழும்பும் துள்ளியமான ஒலியை கேட்டு புல்லாங்குழல் தயாரிப்பை நெகிழ்ந்து பாராட்டி யூடியூப்-ல் பகிர்ந்துள்ளார். இது புல்லாங்குழல் தயாரிப்பாளரான **கிருஷ்ணாராம்** அவர்களுக்கு பிறகே தெரியவந்துள்ளது.




ஸ்பெயினில் உள்ள Wind Artist & இசைப்பயிற்சியாளர் **ஜோஸ்வி முனோஸ்** அவர்கள் இவரது தயாரிப்பை பெற ஆர்வம் தெரிவித்ததோடு, மற்ற இசை ஆர்வலர்களுக்கு இவரே பரிந்துரைத்துள்ளார் என்பதை பெருமையுடன் தெரிவித்தார்.







புல்லாங்குழல் வாங்கவோ, கற்றுக்கொள்ளவோ வேண்டும் என்றால் நிச்சயமாக எங்களை அவசியம் அணுகலாம். இதை வாசிப்பதால், மூச்சு சுவாசம் சீராகும், மனம் செம்மை அடையும், தியான நிலையை அளிக்கும். குறிப்பாக இந்த கொரோனா காலத்தில் அரசு மூச்சுப்பயிற்சி மேற்கொள்ள அறிவுறுத்துகிறது. இதனை வாசித்தால் மூச்சுப்பயிற்சியை மேற்கொள்வது போலாகும். அதோடு, மனதுக்கு ஆனந்தம், உடலுக்கு ஆரோக்கியம் பிறக்கும் என்பது உறுதி. மிக முக்கியமாக புல்லாங்குழல் ஒரு நேர்மறை ஆற்றல் மிக்கது. வீட்டில் சுப நிகழ்ச்சிகள், பிறந்தநாள் பரிசு அல்லது மாணவர்களை உற்சாகப்படுத்த புல்லாங்குழலை பரிசாக அளிக்கலாம் என்று தெரிவித்தார்.

அவரவர் தேவைக்கேற்றபடியும், 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சுலபமாக வாசிக்கும்படியும் தொழில் நுட்பத்துடன் செய்து கொடுத்து பாராட்டுதல்களை பெற்றுள்ளார். புல்லாங்குழல் கற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு வயதிற்கேற்ப, ஸ்ருதிகேற்ப புல்லாங்குழல் பெற்றுக்கொள்ளலாம்.

ஆத்மார்த்தமாக தாம் தயாரிக்கும் புல்லாங்குழல் துறையை மேம்படுத்த தேவையான முயற்சியை தாம் எடுத்து வருவதாக தெரிவித்தார். அதற்கு மக்களின் ஆதரவும் தேவை எனக்கூறி, தம் அனுபவத்தை நம் இதழ் குழுவினருடன் பகிர்ந்தது மகிழ்ச்சி அளிப்பதாக கூறி நன்றி தெரிவித்துக்கொண்டார். இவரை தொடர்புகொள்ள: **94434 54322** என்ற எண்ணை அழைக்கவும். (Email: suruthisagar.bansuri@gmail.com)

-- மீண்டும் சந்திப்போம் அடுத்த புதுமையைத் தேடி...

- இதழ் குழு



# ஊட்டச்சத்து மிக்க உணவுமுறை



வலிமையான உடல், நோய் இல்லாத சமுதாயத்தை உருவாக்க ஊட்டச்சத்து மிக்க உணவு அவசியம். மாவு சத்து, புரத சத்து, கொழுப்பு சத்து இவை மூன்றும் சேர்ந்த சரிவிகித உணவு தான் நம் உடல் ஆரோக்கியத்துக்கு அடிப்படை. வள்ளுவர் கூறியது போல **"மிகினும் குறையினும் நோய் செய்யும்"** இவற்றில் ஏதேனும் ஒன்றை மட்டுமே அதிகம் சேர்த்துக்கொள்வது நோய்க்கு இடம் தரும். ஊட்டச்சத்து என்பது இந்த சரிவிகித உணவை கொண்டது. இத்துடன் இரும்புசத்து, கால்சியம், அயோடின் போன்ற கனிம சத்துக்களையும் ஏ.பி.சி போன்ற வைட்டமின்– களையும் உள்ளடக்கியது.

சீனாவிற்கு அடுத்ததாற்போல அதிக மக்கள் தொகை கொண்ட நாடு என்பதால் இந்தியாவில் சத்தான உணவுக்கு குறைபாடு உண்டாகிறது. குறைந்த சமூக பொருளாதார நிலையும், முழுமையான கல்வி அறிவின்மையும் இதற்குக் காரணங்கள். இதனால் பி.ஈ.எம் எனும் புரதசத்து குறைபாடு, இரும்புசத்து குறைவால் ரத்த சோகை, வைட்டமின் ஏ குறைவால் ரத்த சோகை, வைட்டமின் ஏ குறைவால் கண்பார்வை குறைபாடு போன்ற கோளாறுகள் குழுந்தைகளுக்கு ஏற்படுகின்றன.

ஊட்டச்சத்து குறைபாட்டினால் உடல் எடை குறைவு, தசை சூம்பல், நுண்ணூட்டச்சத்து குறைபாடு, ரத்தசோகை, அயாடின் குறைபாட்டால் தைராய்டு சுரப்பு கோளாறு இவை ஏற்படுவது ஒருபுறம் இருக்க, மறுபுறம், அதிக ஊட்டச்சத்தினால் உடல் எடை கூடுகிறது. இந்தியாவில் 7.5% குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் அவதியுறுவதாக ஆய்வறிக்கை கூறுகிறது. இது குழந்தைகளின் ஆரோக்கியத்தை மட்டுமல்ல, கல்வி வளர்ச்சியையும் பாதிக்கும். இதனால் பல்வேறு நோயத் தொற்றுகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதும் பெரும்பாலும் 10 முதல் 19 வயதுள்ளவர்கள் ஊட்டச்சத்து பற்றாக்குறையினால் அவதியுறுவதாகக் குறிப்பிடுகிறது. உணவே மருந்து என்ற சித்த மருத்துவ தத்துவப்படி, சத்தான உணவு முறைகளே நோயை நீக்கும். நோயைத் தடுக்கும். 'ஊட்டச்சத்து' குறைபாடுகளை நீக்கும் தன்மை கொண்டவையாக உள்ளன.

அரிசியும், உளுந்தும், பருப்பும் சேர்ந்த இட்லியில் மாவுச் சத்தும், புரதச்சத்தும் உள்ளன. அரசியும் பருப்பும் நெய்யும் சேர்ந்த பொங்கல், சரிவிகித ஊட்டச்சத்து உணவுக்கு சிறந்த உதாரணம். புரதச்சத்து மிகுந்த தானியங்களும் பருப்பு வகைகளும் சிறு தானிய வகைகளும், உடலில் உள்ள செல் களுக்குக் கட்டமைப்பை ஏற்படுத்தும். உடலுக்கு வளர்ச்சியைக் கொடுக்கும். வளரும் பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கு தானிய வகைகளை லேசாக வறுத்து பொடி செய்து பாலில் கலந்து கொடுக்கலாம். பச்சரிசி, உளுந்து, சிறுபயறு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு இவை ஐந்தும் சேர்ந்த பஞ்ச முட்டி கஞ்சியைத் தொடர்ந்து கொடுத்து புரதம் மற்றும் ஊட்டச் சத்து குறைவுள்ள நோயாளிகளை குணமாக்க முடியும்.

'எளச்சவனுக்கு எள்ளு' என்ற பழமொழி போல எள்ளு உருண்டையினை தினசரி எடுக்க நல்ல ஊட்டம் தரும். எள்ளு, கார்போஹைடிரேட், புரதச்சத்து, கொழுப்பு சத்து இவை மூன்றும் நிறைந்தது. மேலும், எழும்புக்கு வலிமை தரும். கால்சியம் சத்தும் அதிகம் உள்ளது. இளம் பெண்கள் எடுத்துக் கொண்டால் மாதவிடாய் கோளாறுகள் வரவிடாமல் தடுக்கும்.

'இந்தியன் பாதாம்' என்று கூறப்படும் 'வேர்க்கடலையை' தினமும் எடுத்துக்கொள்ள நல்ல போஷாக்கு கிடைக்கும். இது புரதசத்தும், கொழுப்பு சத்தும் நிறைந்தது. நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். மேலும் துத்தநாக சத்தும் இதில் உள்ளது. கருப்பு உளுந்தின் மகத்துவம் பலரும் அறியாதது. அதிக புரத சத்தும், இரும்பு, கால்சியம் போன்ற தாது சத்துகளும் அதிகம் நிறைந்தது. இதனை களியாகவோ, பனை வெல்லம் சேர்ந்த கஞ்சியாகவோ நெய் சேர்த்து உருண்டையாகவோ எடுத்துக்கொள்ள நல்ல பலன் கிடைக்கும். இளம் பருவத்தில் உள்ள பெண்களுக்கும் மிகச்சிறந்தது. இரும்பு சத்து அதிகம் உள்ளதால் ரத்த சோகையை நீக்கும். நரம்பு மண்டலத்தை வலுப்படுத்தும், சித்த மருத்துவத்தில் நரம்பினை வலுப்படுத்தும் மருந்துகளில் உளுந்து சேருவது குறிப்பிடத்தக்கது. பாசிப்பயறு உருண்டையும் சிறந்த ஊட்டச்சத்தை அளிக்கும்.

கம்பு, சோளம், மக்காச்சோளம் போன்ற புரதசத்து நிறைந்த எளிய சிறுதானிய வகைகளை உணவில் பயன்படுத்துவது உடல் வலிமையைக் கூட்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கீரையை வாங்கி அடையாகவோ, ரசமாகவோ சாப்பிட, அதில் உள்ள உப்பு சத்துக்கும், வைட்டமின்களும் உடலை வலுவாக்கும். முக்கியமாக ரத்த சோகையை நீக்கும்.

கீரையில் இரும்பு சத்து அதிகம். சித்த மருத்துவத்தில் சொல்லப் பட்டுள்ள உணவு முறைக்கும், நம் பாரம்பரிய உணவு முறை– களும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவையே. இரண்டுமே ஊட்டச்சத்து மிக்க சரிவிகித உணவை அடிப் படையாகக் கொண்டவை. ஆகவே, ஊட்டச்சத்துமிக்க பாரம்பரிய உணவு முறையைக் கடைப்பிடித்து வலிமையான சமூகத்தை உருவாக்குவோம்.

– மரு. ஏ.ஆர். கணேசன்


பதிவு எண்: 16 / 2002 Ph : 0452 - 2679676, 4219676

18 ஆம் ஆண்டு சேவை

மகாத்மா முதியோர் இல்லம்

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I

FCRA No. 075940608

PAN No. : AABTM1941R

